**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | |
|---|---|---|
| Calendar .. .. | ) | |
| Miscellaneous .. .. | ) | |
| Preliminary Register .. .. | ) | **Sessions Case No. 89/2020** |
| Sessions .. .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW1** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கலைச்செல்வி |
| Husband's Name | : | செந்தில்குமார் |
| Village | : | புதுப்பட்டி |
| Taluk | : | திருச்சுழி |
| Caste | : | |
| Calling | : | செவிலியர் |
| Religion | : | |
| Age | : | 31 |

(எதிரிகள் ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **08th day of July 2025.**

முதல் விசாரணை **:** நான் தற்போது புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். வழக்குசம்பவத்தில் இறந்துபோன கணேசமூர்த்தி எனது அண்ணன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1 வது எதிரி எனது கணவர். வழக்கு சம்பவத்திற்கு

முன்பு நானும், எனது அம்மாவும் காரியாபட்டியில் குடியிருந்தோம். எனது கணவர் புதுப்பட்டியில் குடியிந்து வந்தார். எனது கணவரை காரியாபட்டியில் சேர்ந்து வாழ கேட்டபோது அவர் மறுதததுவிட்டார். கடநத் 24.05.2020 ம் தேதி மாலை சுமார் 3 மணிக்கு நானும், எனது அம்மாவும் வீட்டில் இருந்தபோது எனது கணவர் என்னிடம் வந்து புதுப்பட்டியில் சேர்ந்துவாழ வருமாறு அழைத்தார். நாங்கள் புதுப்பட்டியில் சேர்ந்து வாழ முடியாது என்று காரியாபட்டியில் சேர்ந்து வாழலாம் என்று சொன்னோம். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோது எனது கணவருக்கும், எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது, அப்போது எனது கணவர் கம்பை எடுத்து எனது தாயார் தலையில் அடித்துவிட்டார். அவர் சொந்த ஊர் சென்றுவிட்டார். நானும், எனது அம்மாவும் மாலை சுமார் 4 மணிக்கு புதுப்பட்டி கிராமத்திற்கு சென்றுவிட்டோம். வீட்டிலிருந்த எனது அண்ணன் கணேசமூர்த்தியிடம் சண்டை நடந்த விவரத்தை சொன்னோம். எனது அண்ணன் என்னுடைய கணவர் வீட்டிற்கு சென்று எனது அம்மாவை ஏன் அடித்தீர்கள் என கேட்கபோனார். மாலை சுமார் 6 மணிக்கு எனது அண்ணனுக்கும், எனது மாமியாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இரவு சுமார் 9 மணிக்கு எனது கணவர், எனது அண்ணன் கணேசமூர்த்தியை அவரது வீட்டிற்கு இழுத்து சென்றார். எனது கணவர், கணவரின் அண்ணன்கள் செல்வகுமார், ஆனந்தகுமார் ஆகியோர் எனது அண்ணனை கட்டையால் அடித்துள்ளார்கள். எனது அண்ணனை அடிக்கும் சத்தம் எனது வீட்டிற்குள் கேட்டது. நாங்கள் தடுக்க சென்றபோது, என் கண் முன்னால் எனது அண்ணனை அவர்கள் மூன்றுபேரும் அடித்தார்கள். வீட்டுவாசலில் வைத்து அடித்தார்கள். எனது அண்ணனை செல்வகுமார் என்பவல் வலது பக்க தலையில் கட்டையால் அடித்தார். தலையில் காயம் ஏற்பட்டது. எனது அண்ணனை கீழே தள்ளிவிட்டார்கள். கீழே கிடந்த எனது அண்ணனை ஆண்உறுப்பின் மேலை அடித்தார்கள். காயம்பட்ட எனது அண்ணனை காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது அண்ணன் சீரியஸாக இருப்பதாக சொல்லி மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

எனது அண்ணன் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். நான் 25.05.2020 ம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு காரியாபட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1. எனது அண்ணன் 26.05.2020 ம் தேதி அரசு மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டார். போலிசார் என்னை ஒரு முறை மட்டும் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் Crlmp.No /2025 மனுவானது u/s 231(2)CrPC ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**